# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



## நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு.ச.செல்வராஜ்,டி.சி.இ.,
துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சிவகங்கை மாவட்டம்
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
சிவகங்கை - 630 562.
dtcpsvga@gmail.com
தொலைபேசி எண் 04575 - 240302

பெறுநர்
தலைவர்,
சாலைக்கிராமம் ஊராட்சி மன்றம்,
இளையான்குடி ஊராட்சி ஒன்றியம்,
இளையான்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

ந.க.எண் 1000/2022/சிமா-2 நாள்: .06.2022

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - சிவகங்கை மாவட்டம் - இளையான்குடி வட்டம் / ஊராட்சி ஒன்றியம் – சாலைக்கிராமம் ஊராட்சி / கிராமம் - சர்வேஎண்.562/4,7,12 -இல் 4550.00ச.மீ (1.12ஏக்கர்) பரப்பளவு பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப – ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. மனுதாரர் இணையதள விண்ணப்பம் எண்.202200801013043, நாள்.27.04.2022.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவங்கை மாவட்டம் அவர்களின் கடித இதே எண். நாள்.26.05.2022
3. மனுதாரர் திரு.C.குழந்தைசாமி அவர்களின் கடிதம் நாள்:31.05.2022.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
5. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004,
6. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
8. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
9. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017/LA1, நாள்.08.09.2017.
12. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவங்கை மாவட்டம் அவர்களின் கடித இதே எண். நாள்.01.06.2022,(கட்டணங்கள் கோரப்பட்டது)
13. மனுதாரர் திரு.C.குழந்தைசாமி அவர்களின் கட்டணங்கள் செலுத்தப்பட்ட நாள்.02.06.2022.

---

1. பார்வை 1-இல் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-இல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 3-இல் கண்ட கடிதம் மூலம் சாலை, பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கும் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை, மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் தானமாக ஒப்படைக்கப்பட்டு அதன் அசல் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவிற்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.து.இ.(சிமா).எண்.54/2022** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. (a) பார்வை 9-இல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7-இல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-இன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenties like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3. பார்வை 9 மற்றும் 10-இல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 6-இல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி / திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண் 3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**இணைப்பு**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்பு மற்றும்
அசல் தானபத்திரம் ஆவண எண்.740/2022 (தாள்கள் 12)

துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சிவகங்கை மாவட்டம்.

நகல்

1. சார் பதிவாளர்,
நயினார்கோவில்
சார்பதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை மாவட்டம்.

2. திரு.C.குழந்தைசாமி,
S/O.சிமியோன்,
499/3, சூசையப்பர்பட்டினம்,
பள்ளிவயல், குருந்தனிவாரியேந்தல்,
சிவகங்கை – 630 551.

உத்தரவு நகல் மட்டும்

3. CHAIR PERSON
TamilNadu Real Estate Regulatory Authority,
(TNRERA)
CMDA Tower – II, Ist Floor, No.1A,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai – 600008

4. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
சிவகங்கை மாவட்டம்.

5. வட்டாட்சியர்,
இளையான்குடி வட்டாட்சியர் அலுவலகம்,
சிவகங்கை மாவட்டம்.

6. தொழில் நுட்ப வைப்பறை

54. 101

இளையான்குடி ஊராட்சி ஒன்றியம்

சாலைக்கிராமம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயலாணைகள்

ஆணை பிறப்பிப்பவர் : திரு. ரெ. தங்கம் ஊராட்சி மன்றத் தலைவர்

ந.க.எண்:2/2022

நாள்:28.07.2022

பெறுநர் :

சி. குழந்தைச்சாமி
த/பெ, சிமியோன்
சூசையப்பர்பட்டணம்,
பள்ளிவயல் குரூப்,
காளையார்கோவில் வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

பார்வை : நகர் ஊரமைப்புத் துறை இயக்குனர், சிவகங்கை .
ந.க.எண்.1000/2022/சிமா-2 நாள்:03.06.2022

சாலைக்கிராமம் ஊராட்சி, சாலைக்கிராமம் குரூப் சாலைக்கிராமம் கிராமத்தில் சர்வே எண்கள்:562/4,562/7,562/12 ஆகிய இடங்களில் அமையும் குடியிருப்பு மனை ப்பிரிவிற்க்கான 1.12 ஏக்கரில்4550.00 ச.மீ இடத்தை பெற்று மேற்படி இடத்தில் சாலைகள், ஊராட்சி ஒதுக்கீடு , மின்சார வாரிய ஒதுக்கீடு ஆகியவற்றிற்கு 1341.40 ச.மீ இடம் போக மீதம்உள்ள 3208.60 ச.மீ இடத்திற்கு பார்வையில் கண்டவாறு ஊராட்சியில் மனைப் பிரிவு ஒப்புதல் பெற சிறப்பு நிபந்தனைகள்: 5 ல் உள்ளவாறு

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவுகளின் விதி எண்: 3 ன்படி கூராய்வு கட்டணமாக | : ரூ. | 1000.00 |
| மனைப்பிரிவுகளின் விதி எண்: 9 ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% | : ரூ. | 38503.00 |
| ஆகமொத்தம் | : ரூ. | 39503.00 |

சாலைக்கிராமம் ஊராட்சியில் ரூ.39503.00 செலுத்தியதால் மனைபிரிவு 19 மனைகளுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டு உரிய ஆவணங்களுடன் ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

தலைவர் 28/07
சாலைக்கிராமம் ஊராட்சி



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate